(6 pages) **Reg. No. : ......................................**

**Code No. : 7353** **Sub. Code : PTLM 41**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Fourth Semester

தமிழ் — Core

பண்டை இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உழிஞையானது எத்திணைக்குப் புறனாக அமைகிறது?

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) நெய்தல்

2. எட்டுத்தொகையிலுள்ள அகநூல் எது?

(அ) பதிற்றுப்பத்து (ஆ) பரிபாடல்

(இ) கலித்தொகை (ஈ) புறநானூறு

3. “என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்

தன்கைக் கொண்டுஎன் நல்நுதல் நீவியும்”–இவ்வரிகள் இடம்பெறும் இலக்கியம்

(அ) குறுந்தொகை (ஆ) நற்றிணை

(இ) ஐங்குறுநூறு (ஈ) அகநானூறு

4. “முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம், கழா அது, உடீஇ” – இது யாருடைய கூற்று

(அ) செவிலித்தாய் (ஆ) தலைவி

(இ) தோழி (ஈ) தலைவன்

5. குறிஞ்சிக் கலியின் ஆசிரியர்

(அ) கபிலர் (ஆ) நல்லந்துவனார்

(இ) இளநாகனார் (ஈ) நல்லுருத்திரன்

6. நும் பாடப்பகுதியிலுள்ள அகநானூற்று நெய்தல் திணைசார்ந்த பாடலில் தலைவி கூற்றாக இடம்பெறும் பாடலைப் பாடியவர்

(அ) குன்றியனார்

(ஆ) அம்மூவனார்

(இ) குடவாயிற் கீரத்தனார்

(ஈ) பெருங்கண்ணனார்

7. ‘கோதை மார்பன்’ என்றழைக்கப்படுபவர்

(அ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

(ஆ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

(இ) பெருஞ்சேரல் இரும்பொறை

(ஈ) இளஞ்சேரலிரும்பொறை

8. மதுரைக்காஞ்சியில் இடைஇடையே விரவி வந்துள்ள பா நயம் எது?

(அ) வெண்பா (ஆ) கலிப்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) கலித்தாழிசை

9. நுளைமகள் காய்ச்சி அரித்த தேறலைப் பரதவர் உண்ணக் கொடுக்கும் ஊர் எது?

(அ) ஆமூர் (ஆ) வேலூர்

(இ) எயிற்பட்டினம் (ஈ) உறந்தை

10. குறிஞ்சிப்பாட்டின் அடியும் பாவும்

(அ) ஆசிரியப்பா 261 (ஆ) ஆசிரியப்பா 269

(இ) ஆசிரியப்பா 103 (ஈ) வஞ்சிப்பா 269

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) விளக்குக : முதற்பொருள், உரிப்பொருள்.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை இலக்கியங்களை அறிமுகம் செய்க.

12. (அ) பிரிவிடை ஆற்றாளாகிய தலைவியைத் தோழி வற்புறுத்திய திறத்தைப் பொய்கையார் எங்ஙனம் காட்சிப்படுத்துகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகையில் ஔவையார், கருவூர்ப் பவுத்திரன் ஆகியோர் பாடிய பாடலின் சிறப்பினை எடுத்தியம்புக.

13. (அ) பாண்டிய நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய பாடலின் சிறப்புக்களை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) "கயமலர் உண்கண்ணாய்! காணாய்! ஒருவன்" எனத்தொடங்கும் குறிஞ்சிக்கலி பாடலின் வழியாகத் தோழி, தலைவிக்குக் கூறவருவனவற்றைத் தெளிவுறுத்துக.

14. (அ) "மா சிதறு இருக்கை" என்ற பெயருடைய பதிற்றுப்பத்துப் பாடல் வழியாக அறியப்படும் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருமாலின் உருவப் பண்பு, நிலமகளை மணத்தல் ஆகியவற்றைப் பரிபாடல் வழிநின்று விளக்குக.

15. (அ) தமிழ் நிலை பெற்ற மதுரையின் மாண்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) "அம் சில் ஓதி! ஆசையால்; யாவதும்

அஞ்சல், ஓம்பு; நின் அணிநலம் நுகர்கு" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) சங்க இலக்கியப் புறத்திணைக்கான கோட்பாடுகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகையிலுள்ள அகஇலக்கியங்களை அறிமுகம் செய்க.

17. (அ) குறுந்தொகை, முல்லைத் திணைப் பாடல்களில் வரும் தலைவிக்கான கூற்றில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றின் "களவன் பத்தில்" இடம் பெறும் கூற்றுக்களை விளக்குக.

18. (அ) அகநானூற்றிலுள்ள தோழி கூற்றின் வழியாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒல்லையூர் தந்தை பூதப்பாண்டியன் சிறப்பினைப் புறநானூற்றின் வழிநின்று ஆய்க.

19. (அ) பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் வழியாக அறியப்படும் சேரமன்னர் வரலாற்றுச் செய்திகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) பாண்டிய நெடுஞ்செழியன் போரில் பகைவரை வென்ற பாங்கினை ஆய்க.

20. (அ) கடை எழு வள்ளல்களின் சிறப்புகளாகச் சிறுபாணாற்றுபடை எடுத்துரைப்பனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன் தலைவியின் காதல் சிறப்பினைக் குறிஞ்சிப்பாட்டு எங்ஙனம் பதிவு செய்துள்ளது? – ஆய்க.